Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௭] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ தை ௴ ௭௳ வெள்ளிக்கிழமை (20 JAN. 1956) [இல - ௪௨]

அரசியல் உலகு:

## முன்னேற்றக் கொள்கைச் சிங்களத் தலைவர்களுடன் முன்னணியாம்!

### பொதுவுடைமைக் கட்சித் தமிழ்த் தோழர்களின் புதுவழி!!

தமிழ் இனத்தின் தலைவிதிதானோ காலத்தின் வேறுபாடோ?—தமிழ் மொழிக்கு சம அரசகரும உரிமை கொடுக்கச் சிங்களவர்கள் இணங்குவார்கள என்று நம்புங்கள் எனத் தமிழகத்திலே இன்னமும் பிரசாரம் நடப்பது!

திரு வீரசிங்கம் ஒரு சொற் சொன்னார். 'அவர்களை நம்புங்கள்' என்று திரு. குமாரசுவாமி கூறினார். அவ்வண்ணம் திரு நடேசன் நம்பிக்கை வைத்திருந்தார் .... .... .... இவ்வாறு இன்னும் பலர். ஆனல் இவர்கள யாவரும் இப்பொழுது அப்படியாகக் கூறவில்லை. ஆனல் இன்னமும் இடமிருக்கிறது என்று அறைகூவித் தமிழ் இளைஞர்களை அழைக்கின்றார்கள் இடதுசாரித தமிழ் அன்பர்கள்.

தமிழ் மக்கள் எதை எடுப்பது, உண்மையென் றுயாரை நம்புவது?

முன்னேற்றக் கொள்கைச் சிங்களத் தலைவர்கள் யார்? அவர்களுக்குச் சிங்கள இனம் அடுத்த தேர்தலில என்ன இடங் கொடுக்கப்போகின்றது?

சமசமாசக் கட்சியினர் கைசசாத்திட்டுப் பொதுவுடைமைக் குழுவினரிய இரு மொழிக் கொள்கை உப்பும் புளியும் ஆகலாத தென்று கண்டித்திருக்கின்றார்கள். ஆனல் யாழ்ப்பாணத்திலே பொதுவுடைமைத் தமிழ்த் தோழர்கள தமிழுக்காக உயிரையே அர்ப்பணஞ் செய்யப்போவதாக உறுதி கூறுகின்றார்கள்.

தேர்தல் நாடகத்தின் பலவேறு திரைகள் தமிழகத்தைத் தத் தளிக்கச்செய்வதுபோலத் தமிழை ஒழிக்கக் கங்கணங் கட்டி நிற்கின்ற சிங்களத தலைவர்கள நடிப்புக் காட்ட வில்லை. அவர்கள் காரியத்திலே நாட்டமாகவே இருக்கின்றார்கள்.

### அரசியல் ஆகாயத்திற் பைசாசமா?

திரு டட்லி சேனநாயகவுக்கு மீண்டும் உடம்பு நலம வேற்றுமையாய்விட்டதாம். முன்னொருபொழுது 'ஆவணி வேலை கிறுத்தத்'தாலே முதன்மைப் பதவியைத் துறந்து நின்றஇவர் பின் அரசியலிற் கலந்துகொண்டு தமிழ் சிங்களச் சம உரிமையையும் ஆகாதெனத் தேர்தற் சமபிரதாயஞ்செய்தார். ஆனல அரசியல் ஆகாயத்திலமறுபடியும் பைசாசம் அவர் கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டது போலும். புத்த பிக்கு ஆகத் துறவு பூணுவாரென்றும் கருதப்படுகின்றதாம். அவ்வாறென்றால் அவர் மறுபடியும அரசியலிற் புகுவாரென்று சோதிடம சொல்லலாம என்னை............? அடுத்த தேர்தலிலே புத்தபிக்குகளே முக்கியமாகப் போட்டியிடுவார்கள்.

## அறநூலும் முறைநூலும்

### எக்காலத்திலும் இயல்பு குன்றுதது அறம்

### நன்றிது தீதிது என்று கூறி நல்வழி காட்டுவது

**சட்டமும், அறமும்**

நீதிநூல், அறநூல், முறைநூல், இலக்கியநூல் என மொழிக்கு உரியவைகளாகத் தோன்றியுள்ள நூல்களைப் பலவாறு பாகுபாடு செய்யலாம். இத்தகைய பாகுபாடுகளுக்கு மேறபட்ட வேறு சில பிரிவுகளோ இதேவகையில் உட்கூறுகளோ இருப்பின் அவை விலக்கு ஆகா. வேண்டற்பாலனவே. ஆனல் இவைகளைத் தகுதியும் இயற்கையும் நோக்கி முறைப்படுத்தும் அவசியம் நேருமானல ஒன்றுமட்டிலும் உறுதியாகக் கூறமுடியும. அதுதான் முதன்மையும் நிகரற்ற தகுதியும் அறநூல் ஒன்றிற்கேஉண்டென்பது. உலகைப் படைத்த முழுமுதல்போலக் குணங்களின் கோர்மையை மூலமாக நின்றியக்கும் ஆந்தப்பண்பு அறம் ஒன்றே ஆகும். அறம் இறைவனோடு தோன்றிய இறைவனின சட்டம். முறையும், நீதியும், ஆள்பவர்கள், ஆளத்தகுதி வாய்ந்தவர்கள் தாமாக அமைத்துக்கொண்டவை.

சட்டத்திற்கும் அறத்திற்கும் இடையிலுள்ள நுணுக்கமான வேறுபாடுகளைப் பலர் அறியார். பூதங்களை இயக்கி உலகத்தை ஆளும் பரவெளியிற் பெரு ஒளியாம் ஆற்றலின் கூடப் பிறந்த நியதியே அறம். இதைச்செய், இதைச் செய்யாதே. இது நலம். இது தீது என நல்லதன் நன்மையையும் தீயதன் தீமையையும் ஆணையிட்டுப் பேசுவது அறநூல. அங்கே கூறப்பெறும் உண்மைகள் அழிக்க முடியாதவைகள். விலக்க இயலாதவை. ஊழும் உண்மையும் போலவே (Fate and Truth) உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்க வல்லவை. விதிவிலக்கு என்னும இரண்டொழியக் 'கழுவாய்' என்ற மூன்றுவது நிலைக்கு அணுவளவும் இடமில்லாதது அறநூல். ஆனல் முறைநூல் கழுவாய்க்கே முழு இருப்பிடமாக அமைந்தது.

இன்னது செய்யத்தகுந்தது இன்னது செய்யத்தகாதது என்று கூறும் அறநூல் வழியை மீறினவர் அப் பிழைக்கு ஆறுதல் தேடி மனச்சான்று வருத்துகின்ற நிலைக்கு ஆளாகும்போது முறைநூலையும் நீதிநூலையும்தேடுகின்றனர். வானவூர்தியிலிருந்து அது கெட்டபோது கீழே விழ நேர்வோர் துணைக் கருவியாகப் பிடித்துக்கொண்டு குதிக்கும் பாருசூட்டைப் போன்றவையே முறைநூலும் நீதிநூலும். மனத்தளவிலே நற்பண்புகளையும் கடவுளையும மறந்து கோவிலும் குளமும் நாடிப் புறத்தளவே நல்வினைதேட முயல்வோர்போல அறத்திற்குச் செய்த பிழையை முறையும், நீதியும் கூறும் தீர்த்தறன்களின் துணையைக் கொண்டு மறைக்கலாம். ஆனல, ஊழ் வினையைக் காட்டிலும வன்மை வாய்ந்தது அறம். தனக்குப் பிழை இயற்றுபவர்களை அது மறப்பதில்லை. அவரவர் வினைப்பயன்களை அறம் நிறுத்து அளவிடத் தவறுவதே இல்லை.

எனவே அறத்திற்குச் செய்த பிழையை மறைக்கக் கழுவாயாக அமையும் அவ்வளவே முறைநூல் (சட்டம்) பயன்படும். நீதிநூலும் ஏறக்குறைய இதே இயல்புடையதுதான். சட்டங்கள் பெருகி வளர்ந்து வந்தால் அந்த வளர்ச்சியை அறத்தின் தளர்ச்சி என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

**நீதியும், அறமும்:**

"எனைத்துணைய ராயினு மென் தினைத்துணையும் [னும் தோரான் பிறனில் புகல்"

என்று கூறுவது அறநூல் வழக்கு. 'தினைத்துணையும் தேராது, பிறன் இற்புகுந்து தீமை புரிந்தவனை எவ்வாறு தண்டித்து ஒறுப்பது?' என்று குற்றத்திற்கு மாற்று வழங்க முன்றுடுவது நீதிநூல வழக்கு.

## மாயையின் வடிவம்

### மக்களை மயக்கி வருத்தும் தன்மை

சிவதொண்டன்

ஒருபோது நாரதமகாமுனிவர் கண்ணபிரானை நோக்கி "அண்ணலே! அடியேற்கு மாயையின் வடிவத்தைக் காட்டியருளல் வேண்டும்" என்று இரந்து வேண்டிக்கொண்டார். சின்னாட் கழிந்தன. கண்ணபிரான முனிவரை அழைத்து 'என்னுடன போதிர்; கானகஞ் சேறும்" என மொழிய முனிவரும் அதற்கொருப்படலாயினர். ஒருப்படவே இருவரும் கானகம நண்ணினா. ஆண்டுப் பல காத தூரம கடந்தனர். நடையாற் கால்கள சோரவே, கண்ணபிரான் முனிவரை நோக்கி, "முனிபுங்கவ! என் நா உலருகின்றது; மெய் சோருகின்றது; விடாய் அதிகரிக்கின்றது. விரைந்து சென்று நீர்கொண்டு வருதிர் என முனிவர் பணித்தார். "சுவாமி! தேவரீர் சிறிது போழ்துபொறுத்தல் வேண்டும். இதோ போய் நீர் கொண்டு வருகுவன்" எனக் கூறி மிக்கவிரைவாக நடந்தார். சிறித தூரஞ் சென்றார் கவின் பெறும ஒரு சிற்றூர் தென்பட்டது. ஆண்டு மிக விரைவாகச் சென்றார். ஓர் இல்லத்தின் முன்றிலை யடைந்து வாயிற்கதவைப் புடைத்தார். புடைத்தார்க்குக் கதவு திறக்கப்பட்டது. ஒரு தலையலங்காரம் புறப்பட்டது. அழகெ

தொடர்ச்சி 6-ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

வாழ். மன்மத ஞூ தை மீ
எ௨ வெள்ளிக்கிழமை

## தமிழகத்தின் தலை விதி !.........

விளையாட்டுப் போட்டியிற் கலந்து கொள்பவர்களும் வேற்றுமை மனப்பான்மை யுடையவர்களாய் வெவ்வேறு இலக்கு நோக்குவார்களேயானால் வெற்றியில்லாமற்போய்விடும் என்பது யாவருமறிவர். உதாரணமாக உதைபந்தாட்டத்திலே காப்பாளரைத் தவிர பதின்மரில் ஒவ்வொருவரும் ஏனையவர்களின் உதவியை நாடாமலும் அல்லது அவர்களுக்கு உதவி அளிக்காமலும் பந்தை யார் உயரமாக உதைந்து விடுவது என்ற விபரீத நோக்கத்துடன் ஆடுவார்களேயானாற் போட்டியைப் பார்க்கச் சென்றவர்களின் ஏளனத்துக்கு மட்டுமன்ற கோபாவேசக் கூச்சலுக்கும் ஆளாவதும் சகசம். பந்தாட்டம் பேயாட்டமாய் முடிந்து விடும்.

அரசியல் அரங்கு விளையாட்டு மைதானமன்று. ஆகவே விளையாட்டிடத்திலேதானும் வெறுக்கப் படுவதாகிய 'ஒற்றையான் ஒரு கொள்கை' என்ற மனப்பான்மை ஈனவிலும் உதயமாகப்படாததொன்றன்றோ? அவ்வாறிருந்தும் இப்பொழுது அரசியல் வானம் இருண்டு தமிழகத்தின் ஒளி மங்கிவிடுமா என்று யோசிக்க வேண்டிய அந்தகார நிலையில் இருக்கும் வேளையில் கட்சிகளும் தலைவர்களும் பந்தாட்டத்திலும்பார்க்கக் கேவலமான வகையிலே பாராளுமன்றப் பதவிப் பந்தய ஆட்டத்திலே கண்ணுங் கருத்தும் உடையவர்களாய் தமிழினத்தைச் சிங்களமே அரசாங்க மொழியெனச் சிங்க நாதஞ் செய்துபொங்கியெழுகின்ற வகுப்புவாத வெறியர்களினுங் கேடாகத் தாழ்த்தி வைக்கும் முறையிலே அரசியற் பிரசாரஞ் செய்கின்றார்கள் என்றால் தமிழகத்தின் தலைவிதியென்னவாகும் என்று நாம் சொல்லுவது!

சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் ஆககுறைந்த வேண்டுகோள் என்ன என்று கேட்டிருக்கின்றார்களா? கேட்கப் போகின்றார்களா? பின் எதற்காகத் தமிழ் நாடு வேண்டும் — கூட்டாட்சி வேண்டும் — உரிமை உரை வேண்டும்—ஒற்றையாட்சியிற் சம நிலை வேண்டும் என்று ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு திக்குநோக்கி முரண்பாடான முழக்கஞ் செய்கிறார்கள். சிங்களமும் தமிழும் சம உரிமையுள்ளன, ஆக்காலும் இது சத்தியம் என்று மொழிந்து நம்பிக்கை ஊட்டிய முதல் அமைச்சர் முதலாகப் பலவேறு தலைவர்களும் இப்பொழுது சிங்களமே மொழி, எங்கள் மொழியே சிங்காசனம் ஏறுதல் வேண்டும் என்று சொன்ன சொற்றவறி நிற்கும் வேளையிலே தமிழகம் செய்தல் யாது? ஒரே குரலில், ஒரேகருத்தில், ஒரே குழுவில நின்று தமிழுக்குச் சம உரிமை வேண்டும் என்று எதிர்மொழியை அழுத்தந் திருத்தமாக ஆணித்தரமாகக் கூறுவதல்லவா வேண்டப்படுவது.

கூட்டாட்சி கொடுப்பது யார்? 'தமிழ்நாடு'த் தானம தருவது யார்? கூட்டாட்சிக் கோடு போடுவது எங்கே? தமிழ் நாட்டுக்குத் தக்கிண திகில் எல்லையிடுவதெங்கே? கூட்டாட்சியிலே மத்திய அரசின் சித்தத்தை யார் கட்டுப்படுத்துவது? தமிழ்நாட்டின் பாதுகாப்புக்குத் தகுந்த அரண் எங்கிருக்கின்றது? இவ்வாறுங் கேள்விகளுககும் இன்னன ஏனையவற்றிற்கும் தலைவர்கள் விளக்கங்கூறி மக்கள் மனறதிலே ஒற்றை நோக்க உணர்ச்சியை உண்டுபண்ணுவதை விட்டு ஒருவரை ஒருவர் விலத்தி உயரப் பறக்கும் உதை பந்தாட்டக் கொள்கை மனப்பான்மையுடன் முயன்று வருவதாலே தமிழகம் காப்பாற்றப்படுமா?

# சைவம் பரப்பியது தேவாரப் பண்

## கலைக்கோயில்களாய்விளங்கின திருக்கோயில்கள்

## எல்லைஎல்லாம்கடந்து நின்றிலங்குவது சைவ சமயம்

### இவை பாதுகாத்து வளர்க்கப்பெறுமாறு சைவசித்தாந்தமகாசமாசமகாநாட்டில் அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் அவர்கள் வேண்டுகோள்

சைவப் பிரசாரத்துக்கு முக்கிய துணை தேவாரப் பண் இசையாகும். சைவ சமயாசாரியர்களுடைய சைவ இயக்கத்தைத் தமிழ் நாடெங்கும் பரப்பியது தமிழிசை என்பது சரித்திரப் பிரசித்தம். இக்காலத்தில் தேவாரப் பாடசாலைகள் சைவாலயங்களில் இருப்பதற்கு வேண்டிய உதவியை இவ்வாலயங்களின பரிபாலகரான அமைச்சர் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சைவ சித்தாந்த சமாசம் கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துவதில் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டத் தக்கது. இக்கூட்டுப் பிரார்த்தனைகளும் சைவப் பிரசாரங்களும் தமிழ் நாடெங்கும் நிகழ்வதற்கு சமாசமும் ஆங்காங்குள்ள சைவத் தொண்டர்களும ஏற்பாடு செய்வது சிறந்த சிவபுண்ணியமாகும்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்கள் கலைக்கோயில்களாக எழுந்தன. சிற்ப அழகுள்ள இக்கோயில்களும், அவற்றின் கலைக் கருவூலங்களாகிய விக்கிரகங்களும், நம்முடைய கண்களையும் உள்ளத்தையுங் கவரும் எழிலுடையன வெளிநாட்டுக்கலை விற்பன்னர்களும் இவற்றைக் கண்டு அதிசயிக்கின்றார்கள். இத்தகைய சிற்பக்கலை தமிழகத்தினின்றும் மறைந்து போகாமல் பாதுகாக்கப்படவேண்டும். கோயில் திருப்பணிகளில் இடுபட்ட நகரத்தார்கள் சிற்பாசாரிகளுக்கு ஆதரவளித்து இக்கலைக்கு உயிர் கொடுத்துள்ளார்கள். அவர்களுடைய சைவத் தொண்டு வளரவேண்டும். இத்துறையில் அரசாங்கத்தின ஆதரவும் அவசியம். அண்ணாமலைப் பலகலைக் கழகத்தின் கட்டிடக கலைப் பகுதியினர் ஆலயச் சிற்பக் கலையைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யின் அது தமிழகத்தின் கலை வளர்ச்சிக்கான பெரும் சேவையாக இருக்கும். தமிழ் மன்னர்கள் காலத்தில கோயில்களில் எல்லாஎழிற் கலைகளும் சிறந்தோங்கின. தமிழகத்தில் சமய வழிபாடு ஒரு கலையாகவே வளர்ந்துள்ளது. சமய தத்துவங்களை அறியாதவர்களும் கலையில் ஈடுபடுவது இயற்கை இக்காலத்தில் தமிழ் மக்களுட் சிலர் சமயத்தை இகழும் நோக்குடன் செய்யும் செயல்களினால் கலையுணர்ச்சியையும் இழப்பது பரிதபிக்கத்தக்கதாகும். பொன்னும் மணியும்கலந்த ஒரு குவியலை ஒருவன்செல்லும் பாதையில் வைத்திருக்க, அவன் இடை வழியில குருடர்கள் எப்படி நடக்கிறாகள் என்பதைப் பரீக்ஷை பார்கக வேண்டும் எனறு கண்ணை மூடிக் கொண்டு சென்று, அவ்வருந்தனத்தை இழந்த பேதைமை போல, தமிழ்க் குலத்திற் பிறந்த நமக்குக் கிடைத்த தெய்வீக நிதியை நமாகவே தள்ள நினைத்தால் அதைவிடப் பெரிய துர்ப்பாக்கியமுண்டோ! தமிழகத்தில் வளர்ந்த சைவம் அன்பு நெறியாகும். அது சாதி சமயத்தைக் கடந்த நெறி என்பதைப் பெரியபுராணம் காட்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்பது ஆன்றோரின் பிரார்த்தனை. சைவ சித்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## ஆர். ஜி.; ஜே. ஆர். போட்டி

ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயக ஸ்ரீ ஜே. ஆர். ஜயவார்தனவுடன் களனியாவில் போட்டியிடக் கூடுமென்ற செய்தி சில நாட்களாய் உலாவியது. அது உண்மை என்று இப்பொழுது கூறப்படுகின்றது.

# மூலாதார உரிமைப் போர்

## பதினொரு பிரிவுகள்

இலங்கை அரசியல் அமைப்பில் இலங்கை மக்களின் மூலாதார உரிமைகள் இவை இவை என்று வகுத்துக் காட்டும் திருத்தமொன்று செய்யுமாறு தமிழ்ப்பிரதிநிதிகள், மேற்சபை அங்கத்தவர்கள் ஆகியோருடைய ஆதரவுடன் அடுத்த மாசம் நடக்கவிருக்கும் ஐக்கிய தேசீயக் கட்சி மகாநாட்டில் அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் ஓர் பிரேரணையைப் பிரேரிப்பார். கல்முனைப் பிரதிநிதி ஜனாப் ஏ. எம். மெர்சா அதை அனுவதிப்பார். உரிமைகள் பதினொன்றும் கீழே வருகின்றன.

1 பிறப்பு, இனம், மொழி, சாகியம், மதம் என்ற எவ்வித வேறுபாடுகளுமின்றித் தன் தன உயிரையும் சுதந்திரத்தையும் தற்பாதுகாப்பையும் பூரணமாக பாதுகாத்துக்கொள்வதற்கு இலங்கையில் வசிக்கும் அனைவருகரும் உரிமையுண்டு.

2 பொதுக் காரியமாயினும் அல்லது பிரத்தியேக காரியமாயினும் ஒருவன் தனது சாகியத்தையும் மதத்தையும் தன் தன் நம்பிக்கைகளையும் பொதுசன ஒழுங்கு முறைகளுக்கு எவ்வித பங்கமு மேற்படாத முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு இலங்கையில் வசிக்கும் மக்கள் அனைவர்க்கும் உரிமை வழங்குதல் வேண்டும்.

3 விசேஷமாக ஒருமதத்துடனோ, மொழியுடனோ அல்லது சிறுபான்மை இனத்துடனோ தொடர்புள்ள மக்கள் தங்கள் மொழி, கலாசாரம், மதம், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் சமூகத் தொடர்புகள் ஆகியவை சம்பந்தமான அபிவிருத்திகளை முன்னிட்டு ஒன்றுகூடவும் சுதந்திரமாக அமைதியான முறையில் கூட்டங்களைக் கூட்டவும் சங்கங்களை நிறுவவும் இலங்கையிலுள்ள சகல மக்களுக்கும் உரிமை வழங்குதல் வேண்டும்.

4 சட்டத்தின் முன்னிலையில் இலங்கைப் பிரசைகளனைவரும் சமமாகவேநடத்தப்படுதல் வேண்டும். எவ்வித பாரபட்சமுமின்றிசட்டத்தினைப் பாதுகாப்பதில் அனைவருக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். சாதி, மதம், மொழி என்ற வேறுபாடு இன்றி அரசியலுடன் பொதுஉரிமைகள், அனைவரும் அனுபவிப்பதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

5 பிரத்தியேகமான தொடர்புகளிலும் வர்த்தகத் துறையிலும் மதம், அச்சகம் சகல வெளியீடுகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றிலெல்லாம் இலங்கை மக்கள் தங்கள் தங்களுக்கு விருப்பமான மொழியினை உபயோகிப்பதற்கு எவ்வித தடையினையும் விதித்தல் கூடாது.

நீதி மன்றங்களிலும், பொதுசன நிலாக்காக்களோடும, நிர்வாக ஸ்தாபனங்களோடும் தங்கள் தங்கள் வியவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளும் போதும் ஸ்தல ஸ்தாபன அங்கத்தவர்கள் என்ற முறையில் அல்லது பாராளுமன்ற அங்கத்தவர் என்ற முறையில் தன் தன் கடமைகளைச் செய்யும் பொழுதும் பேச்சிலோ அன்றேல் எழுத்திலோ தனது சொந்த மொழி

தொடர்ச்சி 5-ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநூலும் முறைநூலும்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மன்னிப்புக்கு இடமளித்துக் கழுவாய் வகுப்பது அறநூல் வழக்கிற்கு அப்பாற்பட்டது. அணுகவும் முடியாதது. நீதியும் முறையும் மன்னிக்கலாம். கழுவாய்களை வகுத்துத் தீர்திறன் (பிராயச்சித்தம்) கூறலாம். ஆனால் அறத்தின் ஆணை இறைவனின் ஆணை, விதி விலக்குகளைத் தவிர வழு நிலைகட்கோ வழுவமைதிகட்கோ அதில் இடம் இல்லை. மொழிக்கு நிலைத்த நல்வாழ்வு நல்க மொழி நூலறிஞர் இடுகின்ற இலக்கண நூல்களாகிய வேலிகளிலேகூட வழாநிலைக்கு அமைதியாக வழுவமைதி என்று ஒரு கூறு காணலாம். அக்கூற்றின் உதவியால் பிழைகளையும் வழுக்களையும் இலக்கண ஆசிரியன் மன்னிக்க முற்பட்டு அமைத்துக்கொள்ளலாம். அது முடியும். இந்நோக்குடனே கண்டால் இலக்கணமும் ஒருவகை முறைநூல் என்ற அளவில் அமைந்துவிடுகிறது. அறநெறிக்கு மனமறியத் தவறுசெய்துவிட்டு நீதியையும் முறையையும் கொண்டு தன் நேர்மையை நிலைநாட்ட முயலும் முயற்சி கண்ணாடியிலே தெரியும் தன்னுருவத்தைத் தனிமையில் தானே கண்டு மகிழ்வது போன்றதே.

நீதியும் சட்டமும் துணை செய்ய அறநெறிக்குப் பிழைகள் பலவும் புரிந்துகொண்டே மேலவைகளின் துணையால் மகிழ்ந்து வாழலாம். ஆனால் அறநூலை வஞ்சித்து, விரும்பியோர் விரும்பியபடியெல்லாம் வளைந்து கொடுக்கும் முறைநூலின் உதவியால் பெற்ற அந்த மகிழ்ச்சி உள்ளத்தோடு ஒட்டாது. மனச்சான்று வதைத்து வதைத்து அறத்திற்குச் செய்த பிழையை நினைவூட்டிக்கொண்டேயிருக்கும். முறைநூல் இரப்பரைப்போல இழுத்தபடியெல்லாம் நீண்டு குறுகும். அறநூல் உருக்கிய பால் வெண்கலம் போல வன்மையானது; நிலைமாறாதது.

### அறத்தின் வன்மை :

மிகுந்த நன்மையைத் தருவதாக இருந்தாலும் நோயுற்றோர் கைப்பு மருந்து உண்ண அஞ்சித் தயங்குவதுபோலத்தான் அறவழியில் உலகத்திற்குத் தயக்கம் ஏற்படுகிறது. 'உண்ண வசதியான மருந்து கிடைக்கப்பெற்று அதனால் நோயும் தீர்ந்துவிடலாகாதா? என்று எண்ணும் பிணியாளர்களைப் போலவே நீதியையும் முறையையும் நம்பி அறத்தை மறக்கும் மனச்சோர்வும் இவ்வுலகவே ஓரளவு மனிதனிடம் கலந்திருக்கிறது. வாளுக்கும் வேலுக்கும், அரசனின் ஆணையாகிய முறைக்கும் அஞ்சுகின்ற அளவில் நூற்றிலே ஒருகூறுகூட அறத்திற்கு அஞ்சுகின்றார்கள் இல்லை. இது அறத்தின் பலவீனமல்ல. அஞ்சுகின்றவர்களின் பலவீனம் தான். வானமும் கடலும்போல நிலையானது அறம். அவற்றிடையே வீடும் மாடமும் போல நிலையற்றவை சட்டமும் ஆட்சியாணைகளும்.

வித்துவான், பண்டிதர்
நா. பார்த்தசாரதி அவர்கள்
எழுதியது

"இன்றி யமையாச் சிறப்பின
வாயினும்
குன்ற வருப விடல்"

என்ற கூற்றில் உரிமையோடு கட்டளையிட்டுக் கூறும் ஓர் அறநூலாசிரியனின் வன்மையைக் காண்கிறோம். மானத் தவற்றிற்குக் கழுவாய் காட்டும் நீதி நூல்களும் முறைநூல்களும் ஒருபால இருக்க "இன்றியமையாத நிலையிலும் அத்தகைய தவறு ஒருதலையாக விலக்கப்படல் வேண்டும்" என்று வரையறுத்துத் தன் ஆணையாற்றலை வற்புறுத்துகிறது அறநூல்.

இன்ன பிழைக்கு இன்ன தண்டனை என்று கூறும் நீதி நூல். அதை நிறைவேற்றும் முறைநூல். இவைகளின் வன்மை இத்தகைய சிற்றலைக்கு அடங்கியதே. ஆனால் விதிவிலக்குகளால் இடிந்துரைக்கும் வன்மை அறநூல் ஒன்றிற்கே உண்டு.

"மருந்தோமற் றூனோம்பும்
வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து"

என்று கூறும் உரிமை முறைநூலுக்கு இல்லை; அறநூலுக்கு உண்டு. வெளிப்படையாகக் கூறினால் முறைநூல் என்பது அறத்திற்குப் பிழைபுரிவார் வசதிநோக்கி வளர்ந்து தோன்றியதே அன்றி வேறில்லை.

### ஆக்கமும் அழிவும்

தோற்றம், ஒடுக்கம், ஆக்கம், அழிவு ஆகிய எல்லா நிலைகளிலும் தான் தானாகவே நின்று தன் ஒளிபரப்ப வல்லது அறம். தோன்றும் போதும் மறையும் போதும் ஆக இருபோதும் முறையே கீழ் வானிலும் மேல்வானிலும் தன் செம்மையொளி பரப்பும் கதிரவனைப்போன்றது அறம் என்றால் அது பொருந்திச் சிறக்கும். அறத்தின் ஆக்கத்திலும்சரி, அழிவிலும் சரி, அதன் ஒளியே விளங்கக் காண்கிறோம்.

"நிழலருமை வெய்யிலிலே" என்றாற்போல அறம் அழிந்து மறம் கொழுக்கும் போதும் அறத்தின் அருமையே சிறந்து தோன்றுகின்றதே அன்றி மறத்தின் தீமை தோன்றிவிடுவது இல்லை.

ஒருவன் மனத்தில் அறவுணர்ச்சி அழிந்து தீயதனைப் புரியத் துணிவு ஏற்படுகின்ற அந்த நிலையிலும், 'நாம் செய்ய எண்ணுவது தீமை' என்ற உணர்வைக் காட்டிலும் 'நாம் செய்ய எண்ணுவது அறத்திற்கு மாறானது ஆயிற்றே!' என்ற அச்ச உணர்வே மிகுதியாக ஏற்படுகிறது. ஆக்கம் அழிவற்ற அறத்தின் ஒரு நிலையை விளக்க இந்த ஒரே சான்று போதும். வளர்ச்சியும் இறுதியும் அற்ற கால வெள்ளத்தை நம் வசதிக்காக நாள் என்றும் மாதம் என்றும் ஆண்டு என்றும் புள்ளிக்கணக்கிட்டுப் போலிப் பெயர் சூடிப் பகுத்துக்கொண்டது போலத் தான் அறத்தின் நிலைமாறுதல்களாக நமக்குத் தோன்றும் நிகழ்ச்சிகளும் அமையுமே யல்லாமல், அவை மெய்யல்லன. அறம் ஒன்றே ஒன்று தான். அது இறைவனைப் போல ஆக்க அழிவற்ற ஒருமை. அதன் ஆணை ஆற்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# நேருவில் நிறைந்த நம்பிக்கை

மேற்கு சர்மன் பலதுறைச் சட்ட உதவி அமைச்சர் ஹேர் பிருன்ஸ் புளுச்சர் இந்தியாவுக்குப் போயிருக்கின்றார். இந்திய முதல் மந்திரி நேரு அவர்களைச் சர்மன் நாட்டுக்கு வரும்படி அழைக்குமாறு மந்திரிசபை தீர்மானித்தது மிகவும் விரும்பவேண்டியதொன்றாகும். பூமிசாத்திரப்படி சர்மானிய நாடு தூரத்திலுள்ளதேயெனினும் நேரு அவர்கள் சர்மனிய நாட்டு ஒற்றுமை பற்றி நினைத்துவிட்டார். இது பற்றி அவர் புல்கானின், குருஷேவ் ஆகியவர்களுடன் பேசியிருக்கலாம்.

இந்திய பொருளாதார நிலையை அபிவிருத்தி மிகப்பெரியது. அது வெளிநாட்டு உதவியின்றிச் செய்ய முடியாது. இந்த முயற்சியில் ஜெர்மனிய நாடு பங்குபற்றுமென்பது வெளிப்படை. இந்தியா மதிப்புக்குரிய வலியுள்ள நாடாய் விட்டது. அது தென்கிழக்கு ஆசியாவில் இப்பொழுது முதன்மை வாய்ந்த நாடாயிருக்கின்றது. இத்தகைய வலியுள்ளதாய் எந்த ஒரு பிணக்கிலும் நடு நிற்கக்கூடிய ஒரு நாட்டுடன் நட்புரிமை பூண்டிருத்தல் பிளவுபட்டிருக்கும் சர்மனி நாட்டுக்கு நலன் தருவதாயிருக்கலாம்.

பொருளாதார, கலாசார நலன்களையே மற்றவைகளிலும் மேலாகக் கொண்டுவருவாரேனும் அரசியல் நலன் மிகுதி மிகுமேயன்றிக் குறைவாகமாட்டாது. அவர் (புளுச்சர்) சர்மனிய ஒற்றுமைக்காக நேரு அவர்கள் திடமாகப் பேசக்கூடிய பேற்றைப் பெறுவாரானால் அவருடைய இந்திய பிரயாணம் முழுப்பலன் படைத்த தொன்றாகும். ஸ்ரீ நேரு அவர்களின் குரலை மொஸ்கோ, பீக்கிங் பட்டினங்கள் எவ்வாறு சிரத்தையுடன் அவதானிக்கின்றனவோ அவ்வாறு வாஷிங்ரன் இலண்டன் நகர்களும் சிரத்தையுடன் அவதானிக்கின்றன. இங்கிபாயங்களுக்காகமாத்திரமல்ல. உலகின் சிறந்த அரசியல் அறிஞர்களுள்ளே ஒருவர்என்ற காரணத்தாலும் நேருஅவர்களைநாம் அன்புடன் வரவேற்போம்.

மேலேயுள்ளவை நேருபற்றியும் இந்தியாபற்றியும் சர்மனிய பத்திரிகைகள் எழுதிய புகழுரைகளாய்க் காணவந்தவை.

# மனக்கவலை மாற்றும் வழி

## நிலையான செல்வம் பெறும் நெறி

"கடுகைத் துளைத்து எழு கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள்" என்பது திருக்குறளைப்பற்றிய அறிஞர் வாக்கு. அதற்கு விரிவுரை கூறுவது தமிழ்நாட்டுப்புராண இதிகாசங்கள். திருக்குறள் ஓர் இலக்கணமாக அமையுமாயின் புராணங்கள் இதிகாசங்கள் இலக்கியமாக அமையும். அதற்கு ஓர் உதாரணம் பார்ப்போம்.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறியே வரும். உலகை ஆளும் பெரிய அரசராயினும் துன்பத்திற்குட்படுதல் கண்கூடு. "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற முதுமொழிப்படி முடிபிழந்து மெலிந்த நடையினராய்ச் சென்ற எத்தனையோ அரசர்களின் சரித்திரத்தை நாம் இதிகாசங்களில் காண்கிறோம்.

இந்திர செல்வம் என்பது மிகப் பெரிய செல்வம். பூவுலகத்தரசர்களே அதை விரும்பி யாகங்கள் செய்வார்கள் கேட்ட உணவெல்லாம் கொடுக்கும் காமதேனு, கற்பகதரு, சங்கநிதி பதுமநிதி இவையெல்லாம் உள்ள செல்வத்தை விரும்பாதார் யார்? அடியார்கள் மாத்திரம் விரும்பமாட்டார்கள்.

"சங்கநிதி பதுமநிதி
இரண்டும் [illegible]
[illegible]
தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம்
மதிப்போமல்லோமு"

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. செல்வத்தை மதித்துக் காப்பாற்றுவதில் மனம் சென்றால் இறைவனிடம் பக்தி குறைந்துவிடும். செல்வம் மங்குவது, அருள் மங்காதது. மங்கும் செல்வத்தில் மயங்கியிருந்தான் இந்திரன். இறைவனை இறைஞ்சுதல் விடுத்தான். துன்பம் தொடர்ந்தது. சூரனுக்கஞ்சி சூல்பம்

ஸ்ரீ வ. குகசர்மா

பும் மேருமலைச் சாரலில் மறைந்திருந்தான் மனைவியை மாற்றார் கொள மனம் வைத்தமை கண்டு உளம் துடித்தான். அரசும் ஆண்மையும் அகன்றான்.

"ஊனும் வடியு மொலி
கடலினுள்ள பல
மீனும் சுமந்து
விறலசுரர்க்கேவல்
[செய்து

இளைத்ததேவர் துன்பங்கண்டு உள்ளம் தேம்பினன் சயந்த குமாரன் இந்திரன் மைந்தன். தந்தை மெலிவுற்றவிடத்து தன்குடித்தலைமை தாங்கல் பரபென மனதுட்கொண்டு தேவர் உலகம் புக்கு அரசு வீற்றிருந்தான். சூரன் தங்கை அசமுகி. அவள் செய்த அச்சமில்லாச் செய்கையால் கையை இழந்தாள். வெகுண்டான் சூரபன்மன் இந்திரன்மேல். இரவிதன் பகையை ஏவினன். போர் மூண்டது. சயந்தன் தன் பெயருக்கு மாறாகத் தோற்றுவிட்டான். இந்திரனூர் திக்கிரையாயது. இந்திர செல்வம் இல்லாத செல்வமாய்விட்டது இக்காட்சி புலவர் மனதை வருத்தியது.

'ஊழியி னன்றி யென்று
மொழிவுறுத் துறக்கமூதூர்
பூழியதான தன்றே புரந்தான்
வறியன் போனான்
வீழுறு சிறையில் உற்றார்
மிக்கவ ரென்றால் யாரும்
வாழிய செல்வம் தன்னை
நிலையென மதிக்கலாமோ"

என்கின்றது கவி.

இந்திரசெல்வமே அழிந்துவிட்டது. ஆதலினாலே செல்வம நிலையானது என நினைக்க முடியாது. இதனாற்போலும் "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" என்று மணிவாசகர் கூறினர். செல்வம் நிலையானதல்ல என்று கேட்டவுடனே, எது நிலையானது? என்ற கேள்வி எழுகின்றது. விடைகூறுகிறார் அது தான் எம்பிரானுடைய பாதகமலத்தில் இருக்கும் வீட்டின்பமே யாகும்.

"காடு போந்தன னிந்திரன்
பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது சயந்தனும்
சிறையிடைப்பட்டான்
நாடில் விண் பதச்செய்கை
யீதெம்பிரா னல்கும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நிலைமைக்குக் காரணம்

## ஒன்றுபடுதலே வெற்றிபெறுதற்கு ஒப்பற்ற வழி

இங்கிலவுலகின்கண்ணே ஒவ்வோர்சாதியினரும் ஒவ்வோர் பாஷையைப் பேசுகின்றனர். தமிழர் தமிழையும், தெலுங்கர் தெலுங்கையும், சீனர் சீனத்தையும், சிங்களவர் சிங்களத்தையும் பேசிவருகின்றனர் இங்ஙனமே பிறவும். ஆதலால் ஒவ்வோர் சாதியினரும் தத்தம் பாஷையில் அபிமானங் கொண்டு அதை விருத்தி செய்தல் சாலச் சிறப்புடைத்தாம். முற்காலத்தில் தமிழ் அரசர்கள் அரசாண்ட காலத்தில் பாஷை, சமயம் இரண்டையும் தம் இருகண்மணிகளாகப் பாவித்து அவற்றைப் போற்றி வளர்த்து வந்தனர். தமிழ்ப்பாஷை எல்லாப் பாஷைகளிலும் மேலானது. அது தெய்வப் பாஷை என்று சொல்லப்படும். இப்பாஷையை யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் அரசாங்கத்தமர்த்தி வளர்த்து வந்ததுமல்லாமல் வடதேயத்துத் தமிழ்ப் புலவர் பெருமக்களையும் ஆதரித்தனர்.

தமிழ்பாஷை இன்றேல் அதனோடு வியாபித்து நிற்கும் உயிர்க்குயிராகிய சைவமும் இல்லையாகும். தமிழ் வேறு சைவம் வேறு அல்ல; அவை இரண்டும் ஒன்றே; இதனைத் தமிழர்கள் உணர்தல் வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்கள் என்ருல் சைவம் தமிழ் இரண்டிலும் எக்காலமும் அபிமானம் உள்ளவர்கள். கடைச்சங்க காலத்துக்குப் பின்னுல் தமிழை வளர்ப்பதற்கு ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்ட இடம் யாழ்ப்பாணமாகும்.

இச்சங்கத்தை நிறுவி நடாத்தினோர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலனரின் மாணவ பெருமக்களான ஸ்ரீமத் கைலாசபிள்ளை, ஸ்ரீமத். அ. குமாரசாமிப்புலவர், சிவஸ்ரீ ஏரம்பையர் முதலானோர் இவர்கள் தாபித்த தமிழ்ச் சங்கத்தின் பிரமாணங்களை அறிந்தே பாண்டித்துரைத்தேவர் தென்னிந்தியாவில் தமிழ்ச் சங்கம் தாபித்தனரென்க.

இத்தகைய தமிழ்ச் சங்கங்களும் பெருமக்களும் தோன்றிய ஈழ நாட்டில் சிங்களமக்களின பாஷைப் பிரச்னைக்கு நாம் அஞ்சுவது வியப்பாகும். காலஞ்சென்ற சைவத் திருமகனர் ஸ்ரீமத் சிவபாதசுந்தரபிள்ளையவர்கள் ஒரு முறை புத்த மதத்தைப் பற்றி உரையாடின பொழுது புத்தமதம் தலை காட்டப் போகிறது என நினைந்து தமது தேக நீக்கத்துக்குச் சில மாசங்கட்கு முன்னர் புத்த மதத்தை ஆராய்ந்து சில குறிப்புகள் எழுதி வைத்தார்கள்.

"வெள்ளம் வருவதற்கு முன்னமே அணை கட்ட வேண்டும்". எந்த விஷயத்திலும் முன்பின் தீர்க்காலோசனை செய்தே முடிவு செய்தல் வேண்டும். இப்போது பாஷைப் பிரச்சனை வரவரக் கூடிக்கொண்டு

தெல்லிப்பழை
திரு. செ. கோவிந்தசாமி

வருகிறது. இவ்விஷயத்தில் தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமைப்படல் வேண்டும் அன்றேல் ஒற்றுமையில்லாக்குடி ஒருமித்துக் கெடும் என ஆன்றோர் வாக்குக்கு இலக்காவோம். சமயம் —பாஷை அரசியல் ஆகிய இந்த விடயங்களில் முன் வாழ்ந்த பெருமக்களின் அடிச்சுவட்டை ஒருவரும் பின்பற்றுவதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் செய்வன சரியெனநினைந்து பாமர மக்களை ஏமாற்றி அரசியல் மேடையிற் புகுந்து பொருள் சேகரித்துப் பிறர்க்கும் ஈயாது தாமும் நல்வழிப்படுத்தாது நீதி நெறி தவறி நின்றமையே இன்று சிங்களவர்கள் ஒன்று கூடி அருமருந்தன்ன எசந் தமிழ்த் தாயைச் சின்னபின்னமாக்க முன்வந்துள்ளதற்குக் காரணமாகும். தமிழராக மானம் காதத தமிழராக! இலங்கையில் வாழ்ந்த பெரியார்கள். மூவருளர். ஒருவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மற்றவர் சேர். பொன். இராமநாதன், இன்னொருவர் ஸ்ரீமத் சிவபாதசுந்தரனர். இந்த மூன்று பெருமக்களும் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள். சேர். பொன் இராமநாதன் இளமைக் காலத்தில் நாவலரோடு அதி தொடர்பு பூண்டவர். பின் தமது பிற்காலத்தில ஸ்ரீமத் சிவபாதசுந்தரனரோடு அன்பு பூண்டவர். இதனல் இராமநாதன் எந்த அரசியல் விஷயங்களிலும தமது நண்பரின் ஆழ்ந்த யோசனைகளைக் கொண்டு தம்கடமையைச் செய்வார் என்று கருதலாம். இதனல் அவர் எக்காரியங்களிலும் வெற்றிபெற்றார். அரசியல் வாதிகளுக்குச் சமய அறிவு, சிவகாருண்ணியம்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## பதவி நீத்தார் திரு குமாரசுவாமி

சாவகச்சேரிப் பிரதிநிதியும் நீதி, போக்குவரத்துப் பகுதிகளின் உதவி மந்திரியுமாகிய திரு. வி. குமாரசுவாமி தமுடைய பதவிகளிலிருந்து உடனே நீங்குவதாகப் பிரதம மந்திரிக்கு அறிவித்தல் எழுதிக் கொடுத்துவிட்டார்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னணியில் நின்று உழைத்தவர்கள் தமிழ் மக்கள். அன்னவர்களின் மொழிக்குச் சமஅந்தஸ்துக் கொடுக்கச் சம்மதியாத அரசாங்கத்தில் தன்மானமுள்ள தமிழர் பதவி ஏற்றிருக்க முடியாதென்பது அவர் காட்டிய காரணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அவர் நீங்கவில்லை. ஒருபோது சிங்களமொழிப் பிரேரணை நிறைவேறியபின் அவர் அக்கட்சியிலிருந்தும் நீங்கக்கூடுமென்று கருதப்படுகின்றது.

## அறநூலும் முறைநூலும்

3-ம் பக்கத்தொடர்ச்சி

றல் வசதிக்கு ஏற்ப ஆளும் ஆற்றல் அல்ல அது. 'பதினெண் கீழ்க்கணக்கு' என்று நாம அடைத்திருக்கும் அரும் பெறல் நூற் செல்வங்களில் மிக்கன அறநூல்களே. முறையினும் அறத்தையே மேலாக மதித்து அறநெறி பிழையாது வாழ்வை அமைத்துக் கொள்ள முயன்ற நம் முன்னோர் பெருமையைப் பொன்னேபோற் கூறும் இவ்வறநூல்கள்.

### வேறுபாடு

எனவே அறநூலும் முறைநூலும் தம்முள் பலேக்கும் மட்வுக்கும் உள்ள அவ்வளவு பெருவேறுபாடுடையன. நீதி மன்றங்களும் வழக்கறிஞர்களும் சட்டப் புத்தகங்களும் பெருகுவது அறநூலின்வளர்ச்சியாகாது. முறைநூலின்வளர்ச்சியே. அறநூல் எவ்வெவற்றைக் குற்றங்களென்று விலக்குகின்றதோ அவற்றைச் செய்ததனல் அறநூல் விதிக்கு மாறுபட்டவர்களை ஒருவாறு தண்டித்து நல்வழிக்குக் கொண்டுவர முயலும் சிறிய முயற்சியே முறைநூலின் செயல். அறம் ஒழுக்கத்தையும் நேர்மையையும் பண்பாட்டையும் ஆணையிடுக் கற்பிக்கிறது. அவற்றைக் கடைப்பிடிக்க இயலாதவர்களுக்கு ஏற்ற தண்டனை அளித்தும் கழுவாயகளைக் கூறியும் அமைகிறது முறை.

அறத்தின் ஆணை நல்வினை தீவினைகளுக்கேற்ப வினைப் பயன்களை நல்கும் இறைவனின் நிறுவையை ஒத்தது. முறைநூல் அவ்வாறு ஆணையிட்டுக் கூறும் உரிமை இல்லாதது. முறை நூலின் ஆட்சியெல்லாம் குற்றம் இழைத்தவர்களைப் பொறுத்து அவர்களுக்குள்ளே மட்டுமநிகழ்வது. அறநூலின் ஆட்சியோ உலகெங்கும் தன்னைக் கடைப்பிடிக்கும் யாவர்க்கும் கட்டளையிட்டு நிற்பது. ஆகவே அறநூல் முறையாகாது. முறை நூலும் அறநூலாக முடியாது. அவை வேறுபாடு உடையனவே.

— கலைக்கதிர்.

## யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

### 1955-ம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள்

பண்டித பரீட்சை (தமிழ்)
முதலாம் பகுதி, மூன்ரும்பிரிவு

ப 2 55 க. சிங்காரவேலு
ப 5 55 க. கணபதிப்பிள்ளை

பாலபண்டித பரீட்சை (தமிழ்)

மூன்ரும் பிரிவு.

பா 2 55 வ. சிவசாமி
பா 15 55 க. சுப்பிரமணியம்
பா 18 55 வ. சின்னத்தம்பி
பா 43 55 ப. நீக்கொலாஸ்
பா 44 55 சா. நல்லதம்பி
பா 50 55 வ. இராசையா
பா 54 55 த. தருமலிங்கம்
பா 55 55 வீ. வேலாயுதம்
60 55 க. செல்லம்மா

ஞான சித்தி

பா 12 55 சி. சரோஜினிதேவி
மூன்ரும் பாடவகை.
பா 45 55 வே தெய்வநாயகம
முதலாம் பாடவகை.

புனர் ஞான சித்தி

பா 29 55 த. சுவாமிநாதன்
இரண்டாம பாடவகை.

பிரவேச பரீட்சை (தமிழ்)
முதலாம பிரிவு

பி 52 55 சி. அன்னலெட்சுமி

மூன்ரும் பிரிவு

பி 1 55 செ. இராசரத்தினம்
பி 4 55 த. தேவிகாராணி.
பி 7 55 வெ. விமலரத்தினம்
பி 12 55 கே. சரஸ்வதி
பி 19 55 சி. மங்கையர்க்கரசி
பி 21 55 வி. திலகவதி
பி 30 55 சு. அன்னபூரணம்
பி 32 55 கா. பாக்கியம்
பி 33 55 செ. பாக்கியம்
பி 39 55 சி. வேலாயுதம்
பி 43 55 கி. இராசரத்தினம்
பி 61 55 இ. நல்லம்மா
பி 69 55 சி சாமித்தம்பி
பி 70 55 பூ சின்னத்தங்கம்

ஞான சித்தி

பி 6 55 சி. செல்வராணி
நாலாம் பாடவகை.
பி 16 55 சி. நாகராசா
இரண்டாம பாடவகை,
பி 20 55 க. ஜானகிதேவி
இரண்டாம் பாடவகை
பி 46 55 செ. பராசக்தி
இரண்டாம் பாடவகை.
பி 57 55 ஆ றகுமான்,
இரண்டாம பாடவகை.
பி 60 55 இ. கமலாம்பிகை
இரண்டாம் பாடவகை.
பி 62 55 க. செல்வமணி,
இரண்டாம் பாடவகை
பி 66 55 ந. புவனேஸ்வரி
இரண்டாம் பாடவகை
பி 73 55 வை. பாலகிருஷ்ணன்
இரண்டாம் பாடவகை.
பி 75 55 பா. பாலேஸ்வரி
இரண்டாம் பாடவகை.

புனர் ஞான சித்தி

பி 3 55 செ. தியாகராசா,
இரண்டாம் பாடவகை,

## ஹரிஜன மாணவர் கல்வி உதவி

கொக்குவில் மகாத்மாகாந்தி ஞாபகார்த்த ஹரிஜன மாணவ சகாயநிதிச் சபையாரால் 8-1-56 ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின்பேருக, 1956ம ஆண்டுக்குபின்வரும ஹரிஜன மாணவர்கள் நிதி உதவி பெறத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர்கள அவர்கள் தங்களுக்குக் கிட்டவுள்ள இந்துக் கலூரிகளில கல்வி கற்பார்கள். (சென்ற வருடம் தெரிவு செய்யப்பட்ட ஆறுபேரும தொடர்ந்து உதவிபெற்று வருகிறுர்கள் என்பதும குறிப்பிடத்தக்கது)

1. கோபாலன் தில்லைநாயகம் சிவியாதெரு யாழ்ப்பாணம். 2. பொன்னையா அரியமலர் சந்தன் வளவு அளவெட்டி. 3 சின்னத்தம்பி தம்பிமுத்தன் கட்டுடை மானிப்பாய். 4. சின்னவன் மயில்வாகனம கட்டுடை மானிப்பாய். 5. சரவணை மாணிக்கவாசகர் கேணியடி சண்டிலிப்பாய். 6. வெற்றிவேலு இராசமணி [illegible] தரிசி அறியத்தருகின்றூர்,

## மனக்கவலை மாற்றும் வழி

3-ம் பக்கத்தொடர்ச்சி

வீடதே யலாற் துன்பற மார்க்கம் வேறண்டோ"
புலவர் தாம் கூற வந்ததை ஒரு சரித்திரத்தை வைத்துக் காரண காரியங்களைக் காட்டிக் கூறிவிடுகிறுர். அதுதானே சிறந்த இலக்கியத்தின் பண்பு. இதைச் சுருக்கி ஆணித்தரமாக அறைந்தார் வள்ளுவர்.

"தனக்குவமை யில்லாதான் தாள சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல அரிது"

வள்ளுவரும் கச்சியப்பரும் கொண்ட இந்த உன்னத கருத்தை நினைந்து நினைந்து வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியதொன்றுகும். மனக் கவலை மாற்றி இன்பம் பெறும்வழி அதுவேயாகும்.

## அரசாங்கமதமுந்தானும்

புத்தகுரு ஸ்ரீஇந்திரஜோதி தேரோ எனபவர் தொடங்கஸ்லந்தப் பகுதிப் பிரதிநிதியாவதற்கு சேர் ஜோன். கொத்தலாவலவுடன் போட்டியிடுவாராம். சிங்களம் தனி அரசாங்க மொழியாயிருக்கவேணடும என்பதும் பௌத்தம் அரசாங்க மதமாயிருக்க வேண்டும் என்பதும் அவர் போட்டிக்கு மேற்கொண்டிருக்கும் கொள்கைகளாம். எதிர்க்கட்சியார் இதுபற்றி ஆராய்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் பரப்பியது........

2-ம் பக்கத்தொடர்ச்சி

தாந்த உண்மைகள் தமிழ் நாட்டுக்கு அப்பாலுள்ளவர்களும் பயன்படத்தக்கன. அவர்களுக்கு உபயோகமாகச் சிறந்த சைவ நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுதல் பேருபகாரமாகும். போப் முதலிய ஆங்கில அறிஞர் சிலர் இத்தொண்டைச் செய்தார்கள். சித்தாந்த தீபிகை என்ற ஆங்கிலப் பத்திரிகை மூலமாகக் காலஞ்சென்ற சைவ அறிஞர் நல்லசாமிப்பிள்ளை சைவ உண்மைகளைச் சிறந்த முறையில் வெளியிட்டு வந்தனர், இத்தகைய பத்திரிகை இக்காலத்தில் அவசியம். சைவசித்தாந்த சமாசம் இத்துறையில் முயற்சி செய்வதுபொருத்தமாகும். ஆங்கிலத்தில் சைவசித்தாந்தத்தைப் பற்றி விளக்கிக் கூறும் நூல்கள் மிகச் சிலவே. சைவசித்தாந்தத்தின் தத்துவ உண்மைகளை அறிந்துகொள்வதற்கு ஆவலுள்ள அறிஞர் பலர் மேற்றிசை நாடுகளில் இருக்கின்றனர். சர். பொன்னம்பலம் இராமநாதன் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவிலுள்ள பல சர்வகலாசாலைகளிலும், தத்துவ ஆராய்ச்சிச் சங்கங்களிலும் சைவசித்தாந்த உண்மைகளை விளக்கி உபந்நியாசங்கள் செய்து அங்குள்ள மக்கள் அவற்றில் ஆர்வம் கொள்ளச்செய்தனர். மேற்றிசை நாடுகளில் விஞ்ஞானம் வளர்ந்து உலக சமாதானத்துக்கும் மனித குலத்துக்கும் அபாயம் செய்யக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. ஆன்ம வித்தை இல்லாமல் விஞ்ஞான வளர்ச்சி பெருங் கேட்டை உண்டாக்கும். இக்காலத்தில் உலகத்துக்கு ஆன்ம வித்தை இன்றியமையாததாகும். அணுக் குண்டுகளைச் செய்யலாம். ஆனல் சிந்தையை அடக்கும் வித்தை மிகமிக அரிது சுதந்தரம்பெற்ற பாரத நாடு உலகத்துக்கு அளிக்கக்கூடியது ஆன்ம வித்தையே ஆகும். உலகத்தையே வளைத்து இக்காலத்தில் பரவிவரும் பொய் மதம் உலோகாயதம். தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகிய சமயங்களிலெல்லாம் சைவத்துக்கு உடன்பாடு. அவற்றிற்கெல்லாம் அது வழிகாட்டியா யிருக்கிறது. சைவசித்தாந்தம் வெறும் தர்க்கமன்று; அநுபவ ஞானமாகும். அதன் உண்மைகளை எல்லாம் ஒருங்கே உணர்த்துவது இத்தலத்திலுள்ள அற்புத நடராஜத் திருக்கோலம். சிவாநுபூதி பெற்ற தாயுமானவர் உலகத்திலுள்ள பக்குவர்களையெல்லாம் கூவி அழைத்ததுபோல் சைவசித்தாந்த சமாஜத்தின் பொன்விழா கொண்டாடுதற்கு ஆனந்த சிதம்பரத்தில் இன்று சிவஞானப் பந்தரின் கீழ்க் கூடியிருக்கும் யாமும் கூவி அழைக்கின்றோம்.

சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

## தேகவியோகம்

பிரம்மஸ்ரீ வை. புவனசபாபதிக் குருக்கள்

நல்லூர் ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் ஆரம்பகாலந் தொடங்கிப் பூசகராயிருந்த பரம்பரையிலுள்ள பிரம்மஸ்ரீ வைத்தியலிங்க குருக்களின் புத்திரரும், மேற்படி கோயிலுக்குத் தாமும் தம்மாலியன்றமட்டும் பூசகராயிருந்ததுடன் தமது சிஷ்ரகள்மூலம் திருவாசி சட்ட விளக்கு முதலிய பல தளபாடங்களைச் சேகரித்து நித்திய நைமித்திகங்களைக் கிரமமாகச் செய்து, அடியார்களுக்கு மனத்திருப்தியைச்செய்து வைத்தவரும், வேதாகமக்கிரியைவல்லுனரும் ஆகிய பிரம்மஸ்ரீ புவனசபாபதிக் குருக்களவர்கள் தைப் பொங்கற்றினமாகிய (14-1-56) சனிக்கிழமை மாலை4-30மணியளவில் கல்வியங்காட்டிலுள்ள தமது இல்லத்தில் பூதவுடலைநீத்தனர் மறுநாள் இவரது ஈமச்சடங்குகள் செம்மணி மயானத்தில் அராலி வடக்கு பிரம்மஸ்ரீ கு. சி. நாகேந்திரக்குருக்களவர்கள் தலைமையில் அவரது சிரேஷ்ட புத்திரர் வைத்தீசுவரசர்மாவினல் திரளான சுற்றமித்திரர் அபிமானிகள் சமூகத்தில் சிறப்புறச்செய்யப் பெற்றன. இவர் தமது பிற்காலத்தில் தமது மைத்துனர் பிரம்மஸ்ரீ ச. சபாபதிக்குருக்கள் முதலியோரால் தாபித்து நடாத்தப் பெற்றுவந்த கல்வியங்காடு சைவ வித்தியாசாலையின் அதிபரில் ஒருவராகவும், திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத காயாரோகணசுவாமி கோயிற் பரம்பரைப் பூசகராகவும் விளங்கியவர். வயசு70. இவருக்கு ஆன்மசாந்தி உரியதாகுக.

இவரை இழந்து துன்புறும் இவரது புத்திரர் புத்திரி, சுற்றத்தார், அபிமானிகள் ஆகியோருக்கு எமது அனுதாபமுரியதாகின்றது.

## கண்ணப்ப நாயனர் குருபூசை

நாள் தை மீ கக ௳.
(24-1-56) செவ்வாய்க் கிழமை.

இடம்: யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள் :
இரவு 6-30—7 தமிழ்மறை யோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்

'கண்ணப்ப நாயனர்'
என்னும் பொருள்பற்றி
சொற்பொழிவு
திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்
17-1 56.

## யாழ்ப்பாண நகரசபைத் தலைவர்

யாழ்ப்பாணம்நகரசபைத் தலைவராக ஸ்ரீ எஸ். எஸ். நவரத்தினம் தெரிவு செய்யப்பெற்றார்.

## அரசியலி லிருந்து நீங்குகின்றார் ஸ்ரீடட்லி

ஸ்ரீடட்லி சேனநாயக பாராளுமன்றப் பதவியையும் ஐக்கியதேசியக் கட்சியையும்விட்டு நீங்கத் தீர்மானித்துவிட்டாராம். அரசியலிலிருந்து நீங்குவதே அவருடையதீர்மானம்.


## கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு கந்தையா குமாரசாமி
வழக்காளி

இல. M B 236

எதிராக

கொடிகாமம்
1 தாமோதிரர் கணபதிப்பிள்ளையும் பெண்
2 செல்லம்மா.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 236ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956ஞு பங்குனி மீ 3 ௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி கச்சாய்க் கோவிற்பற்று கச்சாய் இறை "மையிலன் வளவு" பாகில இலா, 32¼ தென்னைகளும் பனைகளும் மற்றும அதைச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு சின்னக்குட்டி கந்தையாவும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு தம்பி ஐயா பெண முத்துக்குட்டிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் இடங்கலிற் சொரியலாக 4/27 பங்கு.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்,
51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம, 16-1-56,
M 218 20 1 56 (அ 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

1 கொக்குவில் சுப்பையா மயில்வாகனமும்
2 ஷை பெண் ஞானரஞ்சிதமும்
வழக்காளிகள்

இல 11906

எதிராக

சுதுமலை ஆறுமுகம் பொன்னம்பலம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11906ம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பினனல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஞு மாசு மீ 25 ௳ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சண்டிக்குளிக் கோயிற்பற்று சிவியாதெரு இறை 'புளியடி பிரபுலம்' கி. பரப்பு 8 ஆனல் ஆட்சிப்படியும் அளவுப்படியும் 8 3/4 பரப்பும வீடும் கிணறும் பனைகளும் தென்னை மாமும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும் இதில் நிந்தமாக வடக்குப்பக்கமாக 4¼ பரப்பும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்குறோட்டு வடக்கு டாக்குத்தர் St. யோண் புவிராசசிங்கத்தினுடையவாதனம். மேற்கும் தெற்கும் நாகமுத்து இராசரெத்தினத்துக்குடைய வாதனம் இக்காணி D 215/177ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது,

இரு துண்டுக் காணிகள் 1956ம் ஞு மாசி மீ 28 ௳ செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூநகரிப்பகுதி மட்டுவில் நாடு "கணவாய்ப்பள்ளம்" 32 எக்கர் இதில் நிந்தமாக கிழக்குப்பக்கமாக 24 எக்கர் அத்துடன் வங்களாவும், வீடும் கொட்டிலும் தாவும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு மு சிவபாதசுந்தரம் பெண் செல்வரத்தினத்துக்குடைய ஆதனம் வடக்கு முடிக்குரிய ஆதனம். மேற்கு வலவிபுரம் சுப்பையாவுக்கு விலைப்பட்ட இக்காணியில் ஒரு பகுதி தெற்கு ஆறுமுகம் தம்பையாவினதுனமும் மறுபேருக்கு முடையவாதனமும், இக்காணி G 28/240ம் இலக்கப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

2 ஷை பட்டுவில்நாடு இறை "I" என்னும் அட்சரமிட்ட P. P A 1413 என்ற துண்டுக் காணி எக்கர் 1, றூட் 1 பேட்சு 6 02ம் இதற்கெல்லை கிழக்கு முடிக்குரிய வாதனம், வடக்கு பூனகர் சங்குப்பிட்டி றோட்டு மேற்கு முடிக்குரிய காணி தெற்கு மேற்சொலலிய 2-ம காணி, இக் காணி G 28/241ம் புத்தகத்திலே பதியப்பட்டிருக்கிறது.

இக்காணிகளைப்பற்றி ஏதாகுதல் விபரம் அறிகிறதாயிருந்தால பிறக்டர் க. செ. சோமசேகரம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்
M 217 20 1 (அ 200)


# மூலாதார உரிமைப்போர்

2-ம் பக்கத் தொடர்ச்சி

யினை உபயோகிப்பதற்கு இலங்கை மக்களனைவருக்கும் போதிய வசதிகள் செய்தளிக்கப்படல் வேண்டும்.

6 சாதி, சமய, மொழி, சம்பந்தமாக இலங்கையில் சிறுபான்மையினராக உள்ள மக்கள் பெரும்பான்மையானோர் இலங்கையில் அநுபவிப்பதுபோன்ற சட்டப் பாதுகாப்பினையும், அனுசரணைகளையும் அநுபவிக்கக் கூடியதா யிருத்தல் வேண்டும்.

மேலும் அவர்கள் விசேஷமாகத் தங்கள் மொழியினை உபயோகிக்கவும் சுதந்திரமாகத் தங்கள் மதத்தினைப் பின்பற்றி வரவும் வேண்டிய உரிமைகளுடன் அவர்கள் தர்மம், மதம், சமூகம் சம்பந்தமான ஸ்தாபனங்களையும், பாடசாலைகளையும், ஏனைய கல்வி ஸ்தாபனங்களையும் நிறுவி, நிர்வகித்து, கட்டுப்பாட்டுடன் அவற்றைப் பாதுகாத்து வருவதற்கு அவர்களுக்குச் சம உரிமைகள் வழங்கப்படுதல் வேண்டும.

[illegible]

7 ஒரு [illegible] றேல் ஒரு பிரிவிலோ மொழி சம்பந்தமாகச் சிறுபான்மையினராயுள்ளோர் ஓரளவு குறிப்பிடக்கூடிய தொகையினராய் வசிப்பின் அவர்களின் சொந்த மொழியில் அவர்களின் குழந்தைகள் கல்வியைப் பெறுவதற்கேற்ற போதிய வசதிகள் பொதுசன கல்வித்திட்டத்தின்படி அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

8 சாதி, சமய, அல்லது மொழி சம்பந்தமாகச் சிறுபான்மையினராயுள்ளோர் ஓரளவுக்குக் குறிப்பிடக்கூடிய தொகையினராய் வசித்துவரும் நகரங்களிலும் பிரிவுகளிலும் கல்வி மதம், சமயம சம்பந்தமான கருமங்களுக்காக அரசாங்கத்தால் நகரசபையினல் அல்லது வேறு செலவுத்திட்டத்தினல் பொதுசன நிதியிலிருந்து வழங்கப்படும் பணத் தொகையில் சமமான பங்கு அச்சிறுபான்மையினருக்கும் கிடைக்கக் கூடியதா யிருத்தல் வேண்டும்.

9 எதனையும் தமக்கெனச் சொந்தமாக வைத்திருப்பவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். பொதுசன நலனுக்காக எவருடைய சொத்தையும் அபகரித்தல்கூட்டாது. அங்ஙனம் அச்சொத்தினை அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளுவதாயின் சட்டத்தின்பிரகாரமும், சூழ்நிலைகளுக்கேற்பவும் அதற்குரிய நஷ்டஈடு உரிமையாளருக்கு வழங்கப்படவேண்டும்.

10 இலங்கை அரசியற் சட்டத்தின்படி தங்களுக்கு வழங்கப்பட்ட மூலாதார உரிமைகள் மறுக்கப்படின் இலங்கை வாசிகள் எவரும் நீதிமன்றத்தின் மூலம் அதற்கு நிவாரணம் தேடிக்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு.

11 பாராளுமன்றத்திலுள்ள அங்கத்தவர்களின் மூழுத்தொகையில் நாலில் மூன்று பங்கினரின் சம்மதமின்றி இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள எதனையும் மாற்றித்திருத்தஞ் செய்தல் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கோனருக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.


# மாயையின் வடிவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாக் திரண்டொழுகும் அவ்விளநறுங் கன்னிகையைக் கண்ணுற்ற நாரதர் தம்மை மறந்தார். தம் தலைவரையும் மறந்தார். நாச்சோர நீர் வேண்டித் தம்மையனுப்பிய இன்னுயிர்த் தலைவருக்கு என்ன நேர்ந்ததென்பதையும் மறந்தார். மங்கை நல்லாளோடுரையாடத் தலைப்பட்டார். அங்ஙனம் உரையாடுவதிற் பெரிதும் ஈடுபட்டார். பல நாழிகை நேரங்கழிந்தது. ஈற்றில் நாள் முழுவதும் கன்னியோடு உரையாடுவதிலேயே கழிவதாயிற்று. மறுநாளும் முனிவர் அவ்வாறேயுரையாடுவதில் ஈடுபட்டார். அவள் தம் உரைகள் தேனெனப் பாலெனச் சில்லமிர்தூற்றென அவரைக் கொள்ளை கொண்டன. முனிவர்க்கு மங்கை மீது காதல் முறுகி வளர்வதாயிற்று. அவர் அம் மங்கை நல்லாளது தந்தையையடைந்து ஐய! நும் புதல்விக்கும் எனக்கும் இடையே காதல் வளர்வதாயிற்று. அவளை எனக்குத் திருமணஞ் செய்துவைப்பீராக என வேண்டிச் சிறப்புறத் திருமணஞ் செய்துகொண்டார். இல்லறத்தில் ஈடுபட்ட நாரதர்க்குச் சில பிள்ளைகளும் பிறந்தனர். இவ்வாறே பன்னீராண்டுகள் கடந்தன. பெண்ணின் தந்தை இறந்தொழிந்தார். அவர்தம் உரிமைச் சொத்துகள் யாவும் முனிவர்க்காயின. மாடுகளும் வயல்களும் வீடுகளும் நிலங்களும் அவர்க்காயின. இவற்றோடு மனைவி மக்களும் அவருமாக இன்ப வாழ்வெனத் தம்மாற் கருதப்பட்ட வாழ்க்கையை இனிது நடாத்தலாயினர். பல்லாண்டுகள் சென்றன. ஓரிரவு பக்கத்தேயுள்ள சிற்றாறு திரைப்பெருமருப்பினாலே செழுங்கரை யிருபாற்சத்தி அதனையுடைத்துப்பெருகியது. நாரதர் வசித்த சிற்றூர் முழுவதும் வெள்ளத்தாற் சேதமடைந்தது. வீடுகள் இடிந்து வீழ்ந்தன. மக்கள் வெள்ளத்தால் அள்ளுப்பட்டனர். சிலர் நீருள் அமிழ்ந்திறந்தனர். மாக்களும் அவ்வாறேயிறந்தன. நாரதர் ஆங்கிருந்து ஓடித் தப்பவேண்டி நேரிட்டது. மனைவியை ஒரு கையாற் பற்றித் தூக்கினார். ஒருகையால் தமது அரும் பெரும் குழவிகளில் இருவரைத் தூக்கினார். மூன்றாவது குழந்தையைத் தோண்மேல் இவரும்படி செய்தார். நீருள் தத்தளித்துக்கொண்டே நீந்தி நீங்கிக் கரையை நாடிச் சென்றார். அலை மிக்க உக்கிரமாகவந்துபோதிற்று. அந்தோ! நாரதர் தோண்மீதிவர்ந்த குழந்தை தவறி நீரில் வீழ்ந்தது. முனிவர் அதனைக் காத்தற்கு முயன்றார். கையாற் பற்றிய பிள்ளைகளை அலைமோதி அடித்துச் சென்றது. போனவை போக மனைவியையாவது காப்பாற்ற வேண்டுமென முயற்சிக்க, ஈற்றில் அவளும் அலையால் அள்ளுண்டனள். முனிவர் ஒருவரே அலையால் கரையில் தள்ளப்பட்டார். பாவம்! முனிவர் மக்களை இழந்து தாரத்தையும் இழந்து துயரத்தலாழ்ந்திருந்தார் 'அந்தோ'வென அலறி வீழ்ந்தார். இந்நிலைமையில் முண்டகமலரின் தண்டேன் பிலிற்றுங் குளிர்ச்சி வாய்ந்த ஒரு மெலிய திருக்கரம் அவர் முதுகில் தட்டிற்று. "மகனே! என் செய்கின்றனை......? நீர் எங்கே? நீர் கொண்டு வருவதாகச் சென்றனையே சென்று அரைநாழிகை நேரமாயிற்றே! இன்னும் என் செய்கின்றனை?" என்று கண்ணபிரான் கனிவுடன் வினவினர். இதுவே நாரதர் கண்ட மாயையின் வடிவம்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 22—1—56 —— 28—1—56

மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இத்தவாரம் வேலை கூடுதலாயிருக்கும். உமக்குக் கீழே வேலை செய்பவர்கள் உமக்கு எதிராகத் திட்டங்கள் செய்யக்கூடுமாகையால் உம்முடைய கருமங்கள் எல்லாவற்றிலும் கவனமாயிருக்கவும். தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது இழுக்கில்லாமல் வெளியேறுவீர் என்பது ஒரு சமாதானம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வீட்டில்தொந்தரவில்லாதசீவியம் சீவிக்கமாட்டாது வருந்துவீர். சுகவீனம் அல்லது பிழை எண்ணம் உம்மை நிலைகுலைக்கும். ஆனால் நண்பர் அதிக உதவியாயிருப்பர். தனலாபமும் நிச்சயம்.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

எதிர்ப்பு அகன்றுவிடும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுவதில் நீர் பல புதிய வழிகள் உண்டாவதைக் காண்பீர் புகழும் வழக்கு வெற்றியும் நிச்சயம்.

கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

பணத்துறையில் நல்ல வாரம். நீர் இழந்ததாக கருதியிருந்த சில பணங்களைத் திருப்பிப் பெறுவீர். ஆனால் உமக்கு மனச்சமாதான மிருக்கமாட்டாது. பிள்ளைகளுடைய சேசுகமும் தாக்குப்படக்கூடும்.

சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. சிறிது காலத்துக்கு உம்முடைய விசேட கருமங்களைப் பின்போடுதல் புத்தியாகும் குடும்பக் கருமங்களும் சிறிதும் நலலாயிருக்கமாட்டா.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் சிறிது தளம்பமாயிருக்கும். ஆனால் மிகுதி வாரம் மிக நன்றாகும் தனலாபம் நிச்சயம். வாரஇறுதியில் சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.

துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்தவாரம் உமக்குக்கீழே வேலை செய்வோர் உம்மை அதிகம் குழப்புவர். தேவையில்லாமல் ஒரு கூடாத பேரைப் பெறுவீர். ஞாயிறு யாலையும் திங்கள் செவ்வாயும் கவனமாய்க் கழிக்க வேண்டும் பின் அரைப் பங்கு திரும்பவும் நன்றாகும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வேலை இந்தவாரம் மிக அதிகமாயிருக்கும். உமக்கு மனச் சமாதானமு மிருக்கமாட்டாது. விசேட தீர்மானங்கள் செய்வதற்கு முன் நண்பருடன் ஆலோசிக்கவும். உம்முடைய நடைமுறை அலுவல்களில் சில மாற்றங்களுக்கிடமுண்டு. செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கவும்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்

தனலாபம் நிச்சயம் சில பழைய கடுகள் நல்ல பலனைத்தரும். நண்பர் விசேடமாகப் பெண்ணின நண்பரும் சகோதரிகளும் அதிக உதவியாயிருப்பர். கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஆனையெனவந்து பூனையாய்ப் போகும் சில குழப்பங்களைத் தவிர ஒரு நல்லவாரம். வியாபாரம் அல்லது உத்தியோகம் மேலோங்கும். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்தவாரம் கருமங்கள் இலகுவாக ஒழுங்குசெய்யப்படுவதைக் காண்பீர். புதுமுயற்சிகளில் சித்தி நிச்சயம். பெண்ணினநண்பர் அதிக உதவியாயிருப்பர். நீர் நல்ல இன்பமும் அனுபவிப்பீர்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

ஒரு தளம்பமான வாரம். இடைஞ்சல்களிலிருந்து நீர் நீங்குவதற்கு உம்முடைய நண்பருடைய உதவியில் நீர் அதிகம் தங்கியிருக்க வேண்டும். எந்தக் கருமத்திலும் கட்டுப்படவும் வேண்டாம், புதுப்பொறுப்புகளை ஏற்கவும் வேண்டாம்.

## தமிழ் மக்களின் நிலைமைக்குக் காரணம்

4-ம் பக்கத்தொடர்ச்சி

ஈகை முதலிய தர்மக்குணங்கள் இருத்தல் வேண்டும். இத்தன்மைகள் பொருந்திய இராமநாதவள்ளலின் அடிச்சுவட்டை ஒருவராவது பின்பற்றவில்லை. இந்த அடிச்சுவட்டை சரிவரக் கையாண்டு வந்தால் இவ்வளவு தூரம் பாஷைப் பிரச்சினை வளருவதற்கு ஒருவித நியாயமும் இல்லையெனலாம். "நாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவரும்" என்று தாயுமான சுவாமிகள் கூறுவதுபோல் எங்கள் கொள்கைகளே சாலச்சிறந்தவை எனநினைக்கும் ஒவ்வொருவரும் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பாயினர். இத்தன்மையை மாற்றித் தமிழ்ப்பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றுபடவேண்டும். ஒன்றுபடாவிட்டால் பாஷைப் பிரச்சினையில் வெற்றிகாண முடியாது.

## புத்த குருமார் போட்டியிடுவார்களாம்

—0—

எதிரில் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பல புத்தகுருமார் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றார்களாம்.

## தமிழ்ப் பிரதிநிதிகள் தீர்மானம்

அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் திருவாளர்கள் வ. எல் தபிஐயா, சிற்றம்பலம் வி. குமாரசாமி, எஸ் எம். இராசமாணிக்கம் வ. எம். மேர்சா, ஆர். பி. கதிர்காமர், எம். எம் இபுறுகிம் ஆகியோர் கூடி ஐக்கிய தேசியக் கட்சி நிருவாகசபையாரைச் சந்தித்து மொழிப்பிணக்குப்பற்றிய தங்கள் கருத்தை அவர்களுக்குத் தெரிவிப்பதென்றும் அவர்கள் செய்யவேண்டியது நீதியாய்ச் செய்யாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டு நீங்குவதென்றும் தீர்மானித்திருக்கின்றார்களாம்.

## விவேகானந்தன்

சில ஆண்டுகளுக்கு முன் கொழும்பு விவேகானந்த சபை வெளியீடாய் வெளிவந்த விவேகானந்தன் சிறிதுகாலம் தடைபட்டு நின்று இப்பொழுது மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. இதன் வரவு நல்வரவாகுக.

## ஆர். ஜீ க்கு எதிர்க்கட்சி உதவி

களனித் தொகுதிப் போட்டியில் ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகவுக்கு எதிர்க் கட்சியார் யாவரும் உதவி செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றனராம்.

## கோவா மக்களின் சமய அனுட்டானம்

கோவாவிலுள்ள இந்து கிறிஸ்தவ கோயில்களில் வழக்கமாக நடக்கும் சமயசம்பந்தமான விழாக்களை நடக்கக் கூடாதென்று போர்த்துக்கீசிய அரசாங்கம் தடைசெய்திருக்கிறதாம். அரசியல் நிலைமை பற்றி மக்கள் கலந்து பேசுவதைத் தடுக்கவே இவ்விதி உண்டாக்கப்பட்டதென்று கருதப்படுகின்றது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, a. their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday Jan, 20, 1956

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org